KUMBAKONAM DIOCESE NEWS LETTER



Dn. A. Ebenezer Sachin



Dn. D. Joe Prince Deepak



Dn. K. Semion Raj



Fr. S. Arul Francis



Fr. A. Arokia Jayaseelan

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.

Udaya Offset Printers - Kmu. Cell : 94436 51112

DIOCESE OF KUMBAKONAM
NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 52 MAY - 2025 No. 05





Vocation Camp







கல்வி உதவித்தொகை நன்கொடை விவரம்
ஏப்ரல் - 2025

நெ.	விபரம்	தொகை
1.	பூண்டி மாதா பசலிக்கா	10,000
	மைக்கேல்பட்டி பங்கு	
2.	கழுமங்கலம்	10,000
3.	A. ஜார்ஜ், அம்மையகரம்,	1000
4.	Santa Maria Convent	1000
	பாபநாசம் பங்கு	
5.	பங்குத்தந்தை A. மரிய பிரான்சிஸ்	5000
	லால்குடி பங்கு	
6.	பங்குத்தந்தை R. பீட்டர் ஆரோக்கியதாஸ்	10,000
	சலேத் மாதா, கண்டியாங்குப்பம்	
7.	வளர்ச்சிக்குழு	1000
8.	இறைமக்கள்	3370
9.	அருள்பணி S. அருள் பிரான்சிஸ்	1000
10.	அருள்பணி A. ஆரோக்கிய ஜெயசீலன்	1000
	மொத்தம்	37,000

ஆயரின் செய்தி

கிறிஸ்து எழுகிறார்

பிரியமானவர்களே !

புரட்சி செய்பவர் போப்பாக மாட்டார்

போப் ஆனவர் புரட்சி செய்யமாட்டார் – என்று சொல்லாடலை பொய்யாக்கி, நினைவில் வாழும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸ் உயர் மறைமாவட்ட ஆயராக இருந்தபோதே சேரிகளின் ஆயராக ஏழைகளின் ஆயராக செயலாற்றினார். திருத்தந்தையாக உயர்த்தப்பட்ட பின்பு எளிமைக்கு மகுடம் சூட்டியவராக திருத்தந்தையர்கள் தங்கும் ஆடம்பர மாட மாளிகையில் தங்காமல் எளிமையான இடத்தை தேர்ந்தெடுத்தார். பணியாளர்களுடன் சேர்ந்து உண்டு வந்தார், சாதாரண பயண வாகனம் பயன்படுத்தினார். சைப்ரஸ், ஓக் மற்றும் விலை உயர்ந்த உலோகத்தினாலான உடல் அடக்கப்பெட்டியை தவிர்த்து சாதாரண மரப்பெட்டியில் தன் இறுதி பயன அடக்கம்வரை திட்டமிட்ட வரையறை செய்த எளியவர்களின் திருத்தந்தையை நாம் இழந்து அவரின் சீர்திருத்த முன்னெடுப்பு திருஅவையை யார் தொடர்ந்து பொறுப்பேற்கப் போகின்றார் என்ற ஏக்கப் ஏக்கப்பெரு எதிர்பார்ப்புடன் திருஅவை மட்டுமல்ல உலகமே காத்திருக்கிறது.

கடவுளின் கருனையை வலியுருத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் மதம் கடந்து நம்பிக்கைக் கடந்து எல்லாப் பிள்ளைகளும் கடவுளின் பிள்ளைகள் என்பதை உறுதிபடுத்தி உறவை நேசித்து, உரு கொடுத்து, உயிர்கொடுத்து சென்றிருக்கின்றார். பிரிக்கும் சுவர்களை அல்ல, இணைக்கும் பாலங்களை கட்டுங்கள் என்று உலக தலைவர்களுக்கும், மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார். புலம்பெயர்ந்தவர்களுக்கும் அகதிகளுக்கும் ஆதரவும் கரிசனையுமாக இருந்து அவர்களை ஏற்றுக்கொள்ள அழைப்பு விடுத்தார். இயற்கையை நேசித்து பாதுகாத்து வரும் சந்ததியினருக்கு இந்த பூமியை செழுமையாக, வளமையாக, முழுமையாக கொடுத்துச்செல்லவேண்டிய கட்டுப்பாடு எல்லோருக்கும் உள்ளது என்பதை “உமக்கு புகழ் உண்டாகுக”

(Laudato Si) என்ற திருமடல் வழியாக அறிவுறுத்தி உள்ளார். பொறுப்பற்ற பொருளாதார வளர்ச்சியை விமர்சித்தார். சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் புவி வெப்பமடைதல் குறித்தும் எச்சரித்தார். கிறிஸ்துவத்தின் இதயமே மனித குலத்திடம் தனித்து இயங்குவதல்ல மாறாக இயற்கையோடு இணைந்து பயணிப்பதே ஒட்டுமொத்த மீட்புப் பயணம் என்று மொத்த உயிர்கள்பால் கவளைக்கொண்டவர் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்துவின் பணி நீட்சியாக திருத்தந்தை மேற்கொண்ட "மீட்பளிப்பு உரையாடல்" (Redemptive Dialogue) குரலற்றவர்களின் குரலாக, வலுவற்றவர்களின் பலமாக, கைவிடப்பட்டவர்களின் ஆதரவாகவே இருந்திருக்கிறது. ஒத்தபாலின ஈர்ப்புகொண்டவர்கள்மீது கனிவுகாட்டினார். பெண்கள் திருஅவை பணிகளில் பங்கேற்பாளர்களாக்கி பாலின சமத்துவம் கொணர்ந்தார். திருஅவையின் அடுக்கு நிர்வாகத்தில் புதியபாதை பயனத்தை தொடங்கிவைத்து முற்போக்கு மாற்று மறுமலர்ச்சி சிந்தனை வாயிலாக நிறுவன திருஅவை இறுகிப்போய்விடாமல் இயக்க திருஅவையாக சமயத்தோடுமட்டும் நில்லாமல் சமூக இரத்தம் பாய்ச்சியவர். போர், முதலாளித்துவம், நுகர்வு கலாச்சாரம், அதிமித மிகவளர்ச்சி, செயற்கை நுண்ணறிவின் எதிர்கால அபாயம் போன்ற மனிதம் சாராதவைகளுக்கு எதிராக வினையாற்றியவர். ஆதலால்தான் ஹமாஸ், கடவுள் மறுப்பாளர்கள், முற்போக்குவாதிகள், வலதுசாரிகள், புத்தமதத்தினர், உலக வல்லாதிக்கத் தலைவர்கள், அரசர்கள் உள்ளிட்ட ஏகோபித்த இறங்கல்களை பெறுகின்ற வெகுஜென பொதுமக்களின் இழப்பாக திருத்தந்தையின் இறப்பு அமைந்திருக்கிறது.

திருத்தந்தை தனது உயிர்ப்பு இறுதி மறையுரையில் ரஷ்யா – உக்ரைன் போர் முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். காசா மீதான போரை உடனடியாக நிறுத்தவேண்டும், போர் ஆபத்தமானது, ஆயுதங்களின் பிடியிலிருந்து பூமியை விடுவியுங்கள் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார். மியான்மரில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த்தனை செய்வதாக தெறிவித்தார். காங்கோ, சூடான், தெற்கு சூடானின் வன்முறையால்

வந்தவர்கள்அனைவரையும் களப்பணியாளர் திருமதி றீ. சுமதி அவர்கள் வரவேற்றார். பணிக்குழுவின் செயலர் அவர்கள்அவர்கள் பொதுக்குழுக் கூட்டம் பற்ஷ்ய முன்னோட்டமான சிந்தனைகளை வழங்கினார். பொதுக்குழு உறுப்பினர்கள் தங்கள் மறைவட்ட பங்குகளில் நடைபெறும் பிரச்சனைகளை ஆயர் முன்னிலையில் பகிர்ந்து கொண்டார்கள். இக்கூட்டத்திற்கு வந்தவர்கள் அனைவருக்கும் களப்பணியாளர் திரு. பிராங்களின் அந்தோணி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இதில் 40 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

23.03.2025 கோட்டப்பாளையம் பங்கில் நடைபெறும் தீண்டாமை பிரச்சனை பற்ற இரு தரப்பினரிடையே பேச்சு வார்த்தை நடத்த கும்பகோணம் மறைமாவட்ட ஆயர், மறைமாவட்ட பொருளாளர், மறைமாவட்ட முதன்மை குரு, மாநில செயலர், நித்தியா ஆகியோர் சென்றார்கள். இதில் பட்டியனினத்தார்/பழங்குடியினர் பணிக்குழுவின் சார்பாக செயலர் தந்தை இருதயரா அவ ர்கள் கலந்துகொண்டார்.

05.04.2025 சென்னை உயர் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் தமிழக ஆயர் பேரவை நடத்திய கல்விக்குழு கூட்டத்தில், கும்பகோணம் மறைமாவட்ட கல்விக்குழு உறுப்பினர் சார்பாக பணிக்குழுவின் செயலர் தந்தை அருள்பணி A. இருதயராஜ் கலந்துகொண்டார்.

இவண்,

அருள்பணி. A. இருதயராஜ்,

செயலர், பட்டியலினத்தார்/பழங்குடியினர் பணிக்குழு.

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

16, 27, 18 .03.2025 ஜெயங்கொண்டம் மறைவட்ட பொதுக்குழு உறுப்பினர்களை பணிக்குழுவின் செயலர், நடுமண்டல் ஒருங்கிணைப்பாளர் திரு. Ç. தமிழரசன் நேரில் சந்தித்து பொதுக்குழு கூட்டம் பற்றிய முன்னறிவிப்பு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. மேலும் மாலை நேர வகுப்பு மாணவர்கள் சந்திக்கப்பட்டது.

19, 20, 21. 03.2025 மைக்கேல்பட்டி மறைவட்ட பொதுக்குழு கூட்டம் பற்றிய முன்னறிவிப்பு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. மேலும் மாலை நேர வகுப்பு மாணவர்களை சந்தித்தார்.

22, 23, 24. 03.2025 கும்பகோணம் மறைவட்ட பொதுக்குழு உறுப்பினர்களை பணிக்குழு செயலர், களப்பணியாளர் திருமதி. சுமதி நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் செல்வன் பு. தமிழரசன் ஆகியோர் நேரில் சந்தித்து பொதுக்குழு கூட்டம் பற்றிய முன்னறிவிப்புகளை அழைப்பிதல் கொடுக்கப்பட்டது. மேலும் 12 ஆம் வகுப்பு முடித்த தலித் மாணவர்களை திருச்சி தூய வளனார் கல்லூரி நடத்தும்ஆயத்த பயிற்சிக்கு 5 நபர்கள் நமது மறைவட்டத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது.

29.03.2025 திருச்சி உதயதீபம் மற்றும் கும்பகோணம் மறைமாவட்ட பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு இணைந்து நடத்தும் பொதுக்குழு கூட்டம் மறைமாவட்ட மறைப்பணி மையத்தில் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு

பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக இறைவனிடம் வேண்டிக்கொள்வதாக தெறிவித்தார். இறுதி வார்த்தையாக, உலகிற்கு தன் கடைசி வார்த்தையாக "கிறிஸ்து எழுகிறார்" என்று உயிர்த்த கிறிஸ்துவை நமக்கு நம்பிக்கை பயணத்தின் நங்கூறமாக கொடுத்துவிட்டு உயிர்ப்பு பேரின்பத்தில் இணைந்துகொண்டார் 226 ஆம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

தேவாலயங்கள் அனைவருக்குமானது என்பதை விழுமியமிட்ட திருத்தந்தை உலகமும் அனைவருக்குமானது என்ற சித்தாந்தத்தை விசாலப்படுத்தினார். இந்தியாவிற்கு வரவேண்டும் என்ற திருத்தந்தையின் உயர் என்னம் நிறைவேராமல்போனது பெறும் குறையே! நிற்க, இந்திய ஒன்றியத்தின் சார்பாக முதல் குடிமகன் மேன்மைமிகு திரௌபதி முர்மு அவர்களும் தமிழக அரசின் சார்பாக சிறுபான்மையினர் நலன் அமைச்சர் திரு சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு இனிகோ. இருதயராஜ் அவர்களும் திருத்தந்தையின் இறுதி திருநிகழ்வில் பங்கேற்றது நன்றிகுரிய நற்செயலாகும்.

மத ஆலுமை மட்டுமல்லாமல் சமூகநல ஆலுமை கொண்டவராக வாழ்ந்து திருஅவைக்கு புதிய உயர்வான கிறிஸ்துவின் வழித்தட சிந்தனையை திருத்தந்தை நமக்கு விட்டுச்சென்றுள்ளதை திருஅவை முழுவதும் எடுத்துச்செல்வோம். அனைவரும் சமம் என்ற சமூக நீதிகொண்ட ஜனநாயக ஆலுமை தலைமையாக வாழ்ந்து சென்றிருக்கும் திருத்தந்தையின் முன்னெடுப்பை தொடர்ந்து நம் பணித்தலங்களில் செயலுக்குள்ளாக்குவோம். எளிமை விரும்பியாக, மக்களின் திருத்தந்தையாக சிறைகளுக்குச்சென்று கைதிகளின் பாதங்களை கழுவி முத்தமிட்டு அவர்களின் பாவங்களை கழுவிய திருத்தந்தையின் பணிவிடை குருத்துவம் நமக்குள்ளும் பற்றிக்கொள்ளட்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தூய ஆன்மா

இறைவனில் இளைப்பாரட்டும்.

நன்றியுடன்
+ ஆயர் ஜீவானந்தம். **A**

Bishop's Programme – MAY, 2025

Date	Day	Time	Programme
01	Thu	06.00 p.m.	Flag Hoisting Mass: No.1 Tollgate
02	Fri	05.30 p.m.	Jubilee Celebration Mass: Kanjipuram
03	Sat	10.00 a.m.	Final Vows Mass: Holy Cross Sisters, Trichy
04	Sun	08.00 a.m.	Confirmation Mass: Pondy
06	Tue	10.00 a.m.	Sc/St Commission Monitery Meeting: Kumbakonam
		06.00 p.m.	Flag Hoisting: Poondi
07	Wed	10.00 a.m.	Finance Committe Meeting: Kumbakonam
09	Fri	10.00 a.m.	Wedding Mass: Coimbatore
10	Sat	10.00 a.m.	Diocesan Pastoral Council Meeting: Kumbakonam
		06.00 p.m.	Feast Mass : Elakurichi
11	Sun	06.00 p.m.	Blessing of the Way of the Cross Stations: Annamangalam
13	Tue	10.00 a.m.	Council Meeting
14	Wed	06.00 p.m.	Feast Mass: Poondi
15	Thu	06.00 a.m.	Feast Mass: Poondi
16	Fri	10.00 a.m.	Blessing of the Renovated Chapel: HAC, Kumbakonam
		06.00 a.m.	Feast Mass: Thathuvancherry, Sikkalnayakanpettai
17	Sat	10.00 a.m.	Mass: Thenpakkam
18	Sun	06.00 p.m.	Mass: Noothapur
19	Mon	10.00 a.m.	Project Committe Meeting
20	Tue	10.00 a.m.	Senate Meeting: Kumbakonam
21	Wed	10.30 a.m.	Silver Jubillee of Sisters, SAC: Trichy

பெண்கள் பணிக்குழு

02.04.2025 புள்ளம்பாடி மற்றும் உதயா நகர் பகுதியில் பெண்களையும், உடல் நலமற்றவர்களையும் சந்தித்து செபித்து வரப்பட்டது.

07.04.2025 முதல் 12.04.2025 மதுரை ஜனநயக மையத்தில் நடைபெற்ற சமூக மாற்ற பணியாளர்களுக்கான சமூக வழக்காடுதல் மற்றும் உந்துரைத்தல் தலைப்பில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. இப்பயிற்சியில் பெண்கள் பணிக்குழு சார்பாக இரண்டு பெண்கள் பங்கேற்று சான்றிதழ் பெற்றுவந்தார்கள்.

13.04.2025 »»³n பெண்கள் பணிக்குழுவின் தேசிய செயலர் அருள் சகோதரி. லிட்வின் அவர்கள் தலைமையில் 7வது தேசிய கூட்டம் வேளாங்கண்ணியில் நடைபெறுவது குறித்து ஒளடிடிஅ அநநவபே நடைபெற்றது. பணிக்குழு செயலர் அவர்கள் பங்கேற்று கருத்துக்கள் தெரிவித்தார்கள்.

22.04.2025 செம்போடை, சிங்காரத்தோப்பு பகுதியில் பெண்கள் சந்திக்கப்பட்டார்கள்.

28.04.2025 தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று பெண்கள் அமைப்புக்கான நலத்திட்டங்கள், இலவச தையல் மெஷின் கேட்டு நேரில் மனு கொடுக்கப்பட்டது.

இவண்,
அருள்சகோதரி. ஷெர்லி ஆண்டனி, DMI
செயலர், பெண்கள் பணிக்குழு.

23.04.2025 மறைந்த நம் திருதந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு நடைபெற்ற மௌன அஞ்சலி கூட்டத்திற்கு ஒளி, ஓலி பதிவு செய்ய பெஸ்கி கலைக்குழு உதவியது.

05,06.03.2025 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாதா டீவி குழுவினர்களால் தஞ்சை மறைமாவட்ட சமூக பணி மையத்தில் நடைபெற்ற சமூக ஊடகங்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தரங்கில் நமது மறைமாவட்டம் சார்பாக கொணலை, மேலதிருப்பத்துருத்தி, கீழதிருப்பந்துருத்தி ஆகிய பங்குகளிலிருந்து 8 இளைஞர்களும், 4 இளம்பெண்களும் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள் இவர்களை அனுப்பி வைத்து பங்கு தந்தையர்களுக்கு நன்ஷீகளையும் செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவண்,
அருள்பணி A. இராஜமாணிக்கம்,
இயக்குனர், மறைப்பணி மையம்.

அன்பியம், விவிலியம் மற்றும் பொதுநிலையினர் பணிக்குழுக்கள்

அன்புமிக்க பங்குதந்தையர்களே, விவிலிய பணிக்குழு சார்பாக உயிர்த்த ஆண்டவரின் வாழ்த்துக்களும் செபங்களும். °3Ó (விடுமுறை விவிலிய பள்ளி) மே மாதம் 1 ஆம் தேதியிலிருந்து துவங்குகிறது. உங்கள் பங்கில் ஏஷுளு வகுப்புக்கு தேவையான ஆசிரியர் கையேடும், மாணவர் பயிற்சிஏடு என்னிடம் உள்ளது தேவைபடுவோர் பெற்றுக்கொள்ளவும். தங்களுடைய எல்லா ஒத்துழைப்பிற்கும் மனமார்ந்த நன்றி.

இவண்,
அருள்பணி. A. பெனடிக்ட் திரவியம்,
செயலர், அன்பியம், விவிலியம் மற்றும்
பொதுநிலையினர் பணிக்குழுக்கள்.

24	Sat	10.00 a.m.	Renovated Church Blessing: Viragalur
		05.30 p.m.	Chepakkam,Veepur
25	Sun	10.00 a.m.	Final Vows: Thirupathur
26	Mon	10.00 a.m.	Silver Jubillee: Michaelpatti
29	Thu	11.00 a.m.	Blessing of the New Car and Grotto: Pullambadi
		05.30 p.m.	Blessing of the Church: Valagaiman
30	Fri	06.00 p.m.	Mass: Malai Madha Shrine, Konalai

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

மே :

பணி நிலமைகளுக்காக...



பணியின் வழியாக ஒவ்வொருவரும் நிறைவு காணவும் குடும்பங்கள் மாண்பைத் தக்க வைக்கவும் சமூகம் மனிதமயமாக்கப்படவும் நாம் மன்றாடுவோம்.

BIRTHDAY

05.05.1989	Fr. G. Jayan	Bangalore
06.05.1975	Fr. D. Barnabass	Vadaveekam
06.05. 1979	Fr. A. Emmanuvel	Nettalankurichy
11.05.1946	Fr. P. Joseph	Pullambadi
13.05.1985	Fr. S. Arun Patric Xavier	Bangalore
15.05.1972	Fr. A. Lawrence	Bangalore
15.05.1977	Fr. R. Fredrick David	Kulumur
19.05.1961	Fr. K. David	USA
19.05.1961	Fr. L. Mariadoss	Thondamathurai
19.05.1989	Fr. A. Victor Lawrence	Bangalore
20.05.1985	Fr. D. Maria Alphonse Raja	Soosaiyaparpatinam
23.05.1978	Fr. A. James Raj	Kumbakonam
25.05.1982	Fr. S. Arockiadoss	Vadagarai
26.05.1957	Fr. A. Arokiasamy	K.V. Pet
28.05.1981	Fr. A. William Fernandez	Konnaikudy
30.05.1984	Fr. R. Chinnapparaj	Rome

NECROLOGY

02.04.1999	Rev. Fr. S. Antonidas	Mathur
02.05.2021	Rev. Fr. T. Joseph	Kumbakonam
04.05.1973	Rt. Rev. Msgr. Peter Francis	Kumbakonam
04.05.2020	Rev. Fr. S. Arulsamy	Vizhapallam
05.05.1990	Rev. Fr. A. Rex Manickam	Kumbakonam

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

01.04.2025 முதல் 09.04.2025	அனைத்து பள்ளிகளுக்கும் வருகின்ற கல்வியாண்டிற்கு தேவையான மறைக்கல்வி, நன்னெறி புத்தகங்கள் எண்ணிக்கைகள் சேகரித்தல்.
10.04.2025 முதல் 21.04.2025	தவக்கால சிறப்பு நிகழ்வுகளான திருநீற்றுப்புதன் ஆறு வெள்ளிக்கிழமைகள், குருத்து ஞாயிறு மற்றும் புனித நாள்களில் பெஸ்கி கலைக்குழு ஒளி, ஒலி பதிவு செய்து யூடியூப் வழியாக ஒளிபரப்பும் பணி நடைபெற்றது.
18.04.2025	புனித வெள்ளி அன்று நற்கருணை வழிபாடு ஒளி, ஒலி பதிவு செய்து நமது மறைமாவட்டம் சார்பாக மாதா தொலைக்காட்சியில் வெளியிட உதவி செய்யப்பட்டது.
20.04.2025	உயிர்ப்பு பெருவிழா அன்று கும்பகோணம், ஜெயங்கொண்டம், கொணலை பங்குகளிலுள்ள பாடகற்குழு பாடிய உயிர்ப்பு பெருவிழா பாடல்களை ஒளி, ஒலி பதிவு செய்து மாதா டீவி தொலைக்காட்சியில் வெளியிட உதவி செய்யப்பட்டது. அன்று நமது ஆயர் அவர்கள் உயிர்ப்பு இறைச்செய்தி மாதா டீவியில் வழங்கினார்கள்.
23.04.2025	தைலத்திருப்பலிக்கான குருக்கள் கருத்தரங்கிற்கு ஒளி, ஒலி பதிவு செய்ய பெஸ்கி கலைக்குழு உதவியது.
23.04.2025	கூவத்தூர் பங்கில் நடைபெற்ற திருப்பலியை ஒலி, ஒளி பதிவு செய்து மாதா டீவி தொலைக்காட்சியில் வெளியிட உதவி செய்யப்பட்டது.

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

02.04.2025 இளைஞர் இயக்க பொறுப்பாளர்கள் கூட்டம் அலுவலகத்தில் நடைபெற்றது.

09.04.2025 இளைஞர் இயக்கத்தினரால் சமத்துவ சமூகம் என்ற தலைப்பில் சிலுவைப் பாதை நிக ழ்விற்கான பயிற்சி கொடுக்கப்பட்டது.

11.04.2025 வடகரை பங்கில் சமத்துவ சமூகம் என்ற தலைப்பில் சிலுவை பாதை நிகழ்வு இளைஞர் இயக்கத்தினரால் நடத்தப்பட்டது.

15.04.2025 இளைஞர் இயக்கத்தினரால் வேளாண்மை துறையில் இயற்கை வேளாண்மை விழிப்பு ணர்வு கலை நிகழ்ச்சி பாபநாசம், திருவையாறு பகுதிகளில் நடத்தப்பட்டது.

5,6.04.2025 நம்பர் 1, டோல்கேட், குழந்தையே திருத்தளத்தில் திருமண தயாரிப்பு கருத்தரங்கு நடைபெற்றது.

26,27.04.2025 கும்பகோணம் புனித அருளானந்தர் மறைபணி நிலையத்தில் திருமண தயாரிப்பு கருத்தரங்கு நடைபெற்றது.

மே மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	மே 03 மற்றும் 04 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	ஏப்ரல் 17 மற்றும் 18 சனி மற்றும் ஞாயிறு	அருளானந்தர் மறைபணி நிலையம், கும்பகோணம்

இவண்,
அருள்பணி A. ஜேம்ஸ்ராஜ்,
செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

10.05.2021	Rev. Fr. C. Edison Chinnappan	Kumbakonam
11.05.2019	Rev. Fr. A. Vincent	Kumbakonam
13.05.1955	Rev. Fr. L. Pragasam	Perumpannaiyur
13.05.1990	Rev. Fr. A. Antony Rajan	Kumbakonam
16.05.1956	Rev. Fr. A. S. Lourdes	Kumbakonam
17.05.1983	Rev. Fr. C. P. Periyanayagam	Kumbakonam
21.05.1913	Rev. Msgr. Hugo Bottero	Kumbakonam
23.05.1986	Rev. Fr. L. Savarinathan	Michaelpatti
24.05.2021	Rev. Fr. I. Antony Joseph	Kumbakonam
25.05.2021	Rev. Fr. R.S Antonysamy	Kumbakonam
28.05.1989	Rev. Fr. R. Soosainathar	Kumbakonam

ORDINATION DAY

04.04.2016	Fr. J. Arul Don Bosco	Kulumur
01.05.2002	Fr. M. Selvaraj	Assisipuram
01.05.2006	Fr. A. Arul Prakasam	Coimbatore
01.05.2006	Fr. A. Antony	Kmubakonam
01.05.2006	Fr. A. Augustine Peter	Thiruvalanthurai
01.05.2006	Fr. A. Benedict Prabaharan	Coimbatore
01.05.2006	Fr. S. Joseph Kennedy	Jayankondam
01.05.2006	Fr. A. Paul Jaya Kumar	Chennai
01.05.2006	Fr. J. Ruban Antoniraj	Poondi
01.05.2006	Fr. V. Sahaya Christuraja	Perumalpalayam
01.05.2006	Fr. V. E. Santha Kumar	Samayapuram

01.05.2006	Fr. S. J. Soosai Manickam	Perambalur
02.05.2005	Fr. J. Amarsingh Eliyazer	Kumbakonam
02.05.2005	Fr. A. Arul Irudayasamy	Germany
02.05.2005	Fr. S. Don Bosco	Kmubakonam
02.05.2005	Fr. S. Felix Samuel	Varatharajanpet
02.05.2005	Fr. R. Fredrick David	Kulumur
02.05.2005	Fr. S. Mariadoss	Konalai
02.05.2005	Fr. A. Rajamanickam	Kumbakonam
02.05.2005	Fr. J. Regis	Pudukottai
02.05.2005	Fr. K. Robert	Naduvalur
02.05.2005	Fr. A. Victor Paulraj	Keelamichaelpatti
02.05.2005	Fr. L. Vijay Nirmal Gnaniraj	Germany
02.05.2005	Fr. K. Xavier	Thottiam
02.05.2011	Fr. J. Bastin Britto	Vadaveekam
02.05.2011	Fr. S. Chinnaparaj	Germany
02.05.2011	Fr. B. John Bosco	Tindivanam
02.05.2011	Fr. M. Joseph Raj	Kaniyiruppu
02.05.2011	Fr. E. Joseph Micheal Raj	Thirumanthurai
02.05.2011	Fr. A. Mark Marceline	Irungalur
02.05.2011	Fr. A. Benedict Diraviam	Kmubakonam
04.05.1984	Fr. C. Kulandai	S.P. Koil
04.05.1984	Fr. M. A. Thanaraj	Koovathur
04.05.1984	Fr. S. Soosainathan	Periyavarseeli
06.05.1990	Fr. K. David	USA
06.05.1990	Most. Rev. A. Jeevanandam	Kmubakonam

2. ஆயரின் மறைமாவட்டஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மேய்ப்புப்பணிபேரவையில் இடம் பெறுவர்.

3. குருக்கள் மாமன்ற செயலர், மறைமாவட்டஅளவில் துறவியர் பேரவை நிர்வாக உறுப்பினர்கள் மேய்ப்புப்பணி பேரவையில் உறுப்பினர்களாக இருப்பர்.

4. தங்களதுபணியில், நீடிக்கும் வரை இவர்கள் மேய்ப்புப்பணி பேரவையில் உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள்.

3. நியமனஉறுப்பினர்கள்

வழக்குரைஞர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், சமூக சேவையாளர்கள் போன்றசிலரைநியமனஉறுப்பினர்களாகஆயர் நியமிக்கலாம். இவர்களின் எண்ணிக்கைமொத்தஉறுப்பினர்கள் எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்குமிகாமல் இருத்தல் வேண்டும்.

4. உறுப்பினர்களின் தகுதிகள்

1. உறுப்பினர்கள் கத்தோலிக்கநம்பிக்கையைக் கடைபிடிப்பவர்களில் தலைசிறந்தவர்களாகவும், ஒழுக்கநெறியில் சிறந்து வாழ்பவர்களாகவும், விவேகம் உடையர்களாகவும் இருத்தல் வேண்டும் (தி.ச.எ.512§ 3).

2. பங்குதந்தையோடு இணைந்துசெயல்படுபவராக இருத்தல் வேண்டும்.

3. பொதுநலத்தொண்டில் நாட்டம் உடையராக இருத்தல் வேண்டும்.

மேலேகண்டவிதிமுறைகளின்படிபங்குதந்தையர்கள் தங்கள் பங்கில் உள்ளபொதுநிலையினர் சார்பாக இரண்டு பிரதிநிதிகளை மேமாதம் 10-ம் தேதி கும்பகோணம் புனித ஜான் தேபிரிட்டோ மறைப்பணிமையத்தில் நடக்கும் மறைமாவட்ட மேய்ப்புப் பணிபேரவைக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அருள்திரு. ம. பிலோமின் தாஸ்

மறைமாவட்டமுதன்மைக் குரு

தனித்துவமான செயல்பாடுகளையும் கடமைகளையும் கொண்டுள்ளனர். இவைகளைச் செய்வதன் வழியாகதிருஅவைவளர்ச்சிப் பெறுகிறது. ஒவ்வொருநிலையினரும் மற்றநிலையினரின் செயல்பாடுகளை தங்களுக்கென்று எடுத்துசெயல்படுவதுஒட்டு மொத்தவளர்ச்சிக்கு கேடுவிளைவிக்கக்கூடும். அவரவர் தங்களுக்குள்ள தனித்துவமான செயல்பாடுகளைச் செய்வதே நம் எல்லாரின் பொறுப்பாகும்.

ஒவ்வொருமறைமாவட்டத்திலும் ஆயரின் தலைமையில் இயங்கும் மறைமாவட்டமேய்ப்புப்பணிபேரவைஅமைக்கப்படுதல் அவசியம் (தி.ச.எ.511). இந்தபேரவைமறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி திட்டங்களை ஆய்வு செய்து மேய்ப்புப்பணி திறம்பட செயல்படுத்தப்பட பரிந்துரைகளை வழங்கும். மேய்ப்புப்பணிப் பேரவையின் உறுப்பினர்கள் மறைமாவட்டத்தின் இறைமக்களாகிய பொதுநிலையினர், துறவியர் மற்றும் அருள்பணியாளர்களின் பிரதிநிதிகளாக இருப்பர். மேலும் இந்தமேய்ப்புப்பணி பேரவை மறைமாவட்டத்தில் உள்ள பல்துறைவல்லுனர்கள், பலவகைமேய்ப்புப்பணியில் ஈடுபடுவோர் இவர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகவும் இருத்தல் அவசியம் (தி.ச.எ.512§2).

1. உறுப்பினர்கள் - பங்கு இறைமக்களின் பிரதிநிதிகள்

ஒவ்வொருபங்கிலிருந்தும் பங்குபேரவைஉறுப்பினர்களிலிருந்துஓர் ஆண் மற்றும் ஒருபெண் பங்குதந்தையால் தெரிவுசெய்யப்பட்டு மறைமாவட்டமேய்ப்புப்பணி பேரவைக்கு பங்கின் பெயரால் அனுப்பிவைக்கப்படுவார். பங்குபேரவையில் கிளைகிராமங்களின் பிரதிநிதிகள் பங்கேற்காத சூழ்நிலையில் கிளைகிராமங்களின் சார்பாக ஒருபிரதிநிதியும் பங்குபேரவை சார்பாக ஒருபிரிதிநிதியும் அனுப்பப்படுவர். இவர்களில் ஒருவர் பெண் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும்.

2. பணித்தகுதியின் அடிப்படையில் உறுப்பினர்கள்

1. அன்பிங்கள் மற்றும் மறைமாவட்டத்தில் இயங்கும் பக்தசபைகளின் மறைமாவட்டதலைவர்கள் பணிஉறுப்பினர்களாவர்.

06.05.1990	Fr. G. Cosmon Arokiaraj	Kumbakonam
06.05.1990	Fr. D. Antony Solomon	Sembodai
06.05.1991	Fr. L. Mariadoss	Thondamanthurai
06.05.1991	Fr. V.I. Peter	Fatimapuram
12.05.1986	Fr. A. Santhanam	Punalvasal
12.05.1986	Msgr. M. Philomindas	Kmubakonam
12.05.2010	Fr. S. Albert Xavier	Poondi
12.05.2010	Fr. S. Arockiadoss	Vadagarai
12.05.2010	Fr. P. Arockia Raja	Pune
12.05.2010	Fr. M. Arun Bellarmin	Singapore
12.05.2010	Fr. N. Chinnapparaj	Sikkalnayakanpettai
12.05.2010	Fr. R.S. Don Bosco	Kmubakonam
12.05.2010	Fr. I. John Kennedy	Singapore
13.05.1981	Fr. A. Soosaimanickam	Thenpakam
13.05.1987	Fr. A. Francis	Annamangalam
13.05.1987	Fr. R. Peter Arokiadoss	Lalgudi
13.05.1987	Fr. A. Xavier	England
13.05.1987	Fr. T. Devadoss	Kmubakonam
13.05.1988	Fr. M. Antonysamy	Vilagam
13.05.1988	Fr. M. Francis	Vandalai
13.05.1988	Fr. J. Antony Joseph	Kumbakonam
22.05 2021	Fr. C. Alwin Joseph	USA
22.05.2021	Fr. N. Valan Arasu	USA
27.05.1980	Fr. G. Michael	Kovandakurichy
27.05.1980	Fr. P. Thangasamy	Elakurichy
27.05.1980	Fr. M. Stanislaus	Vadugarpet

MASS STIPENDS

On April 13, 2025, the Dicastery for the Clergy has issued a Decree on Discipline of the Intentions for the Holy Mass. In the wake of *Collective or cumulative mass* at times used during the Novena days and the Feast days at the discretion of the parish priests, the above discipline gives normative guidelines. A synopsis of the decree is given below:

1. It is the tradition and the teaching of the Catholic Church that every single offering received with a single Mass intention needs to be celebrated with individual Masses respecting the intention of the donors.Without the mandate of the TNBC, it is against the principle of justice if cumulative mass is offered.
2. In the Collective Mass, the donors should be explicitly informed about the single Mass to be offered for all the intentions and the donors should have given their assent for such a practice on a particular day. The donors' assent cannot be presumed.
3. In Tamilnadu, the TNBC has not allowed *Cumulative Mass*. Many Intentions can be read during the same Mass; however, every intention is to be exonerated by a separate Mass successively.
4. Even if the collective Mass is offered, the priest is to take only one stipend and the stipends for the rest of the Mass Intentions should be remitted to the Diocese. The Parish priest has no option either to make use of the stipends as he likes or spend the money as TA to be given to the preachers who assisted the parish during the Novenas.
5. The Ordinary needs to make these norms known to the clergy and ensure that these norms are strictly followed.
6. To implement the above principles, every parish and shrine should maintain a Mass Register in which all the entries with the Mass intentions and the stipends by dates should be made along with the number of Masses exonerated by the priests or sent to the diocese.
7. At the end of every year, it is to be verified that those who collect the Mass Stipends should have exonerated or sent them to the diocese before the end of every year.
8. Violation of Mass stipends is a gave disciplinary violation demanding a disciplinary or penal measure to be taken on the defaulters.

Msgr. M. Philomindas,
Vicar General.

மறைமாவட்டமேய்ப்புப்பணிபேரவை கூடுகை
கும்பகோணம் மறைமாவட்டம்
இடம் : புனித ஜான் தேபிரிட்டோ மறைப்பணி நிலையம், கும்பகோணம்

நாள்: மே மாதம் 10, 2025 சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை

திருமுழுக்குப் பெற்றுகும்பகோணம் மறைமாவட்டஆயரின் தலைமையில் தங்களின் அழைத்தலுக்கேற்ப நம்பிக்கையாளர்களாய் வாழும் பொதுநிலையினர், அருள்பணியாளர்கள் மற்றும் துறவியர் அனைவரும் கும்பகோணம் தலத்திரு அவையின் அங்கத்தினர்கள் ஆவர் (தி.ச.எ.512§1). இவர்கள் இயேசுவின் முப்பணிகளானபோதகப்பணி, அர்ச்சிக்கும் பணி, வழிநடத்தும் பணிஆகிய இவைகளில் தங்களின் அழைப்பிற்கேற்ப பங்கேற்பாளர்களாய் திகழ்கின்றனர் (தி.ச.எ.204§1). கிறிஸ்துவின் மறைவுடலில் தனிப்பட்ட அழைத்தலின் வழியான பல அங்கங்களாய் திகழும் இறைமக்கள் தலத்திருஅவை என்ற கிறிஸ்துவின் மறைவுடலின் முழுவளர்ச்சிக்குபெரிதும் பங்காற்றுகிறார்கள் (தி.ச.எ. 208, 210).

பொதுநிலையினர் தங்களின் தனித்துவமானநிலையால் கத்தோலிக்க கிறிஸ்தவ மதிப்பீடுகளை சமுதாயத்தில் வாழ்ந்துகாட்டுவதன் வழியாகசிறந்தசாட்சிகளாய் வாழ்கிறார்கள். கிறிஸ்துவவாழ்வை உயிரோட்டமானவாழ்வதன் வழியாகசமுதாயத்தைப் புதுப்பித்து இயேசுவிரும்பிய இறையரசு கட்டிஎழுப்பப்பட உதவியாய் இருக்கிறார்கள் (தி.ச.எ.225§2). ஒவ்வொருகிறிஸ்தவரும் தனிப்பட்டமுறையிலும், குடும்பங்களாகவும் சிறுசிறுகுழுக்களாகவும், பங்குஅளவிலும் மறைமாவட்டஅளவிலும் தங்களின் பங்களிப்பை ஆற்ற திருஅவை அழைப்புவிடுக்கிறது (தி.ச.எ. 215,226§1).

பொதுநிலையினர்,துறவியர் மற்றும் அருள்பணியாளர் என்றமுறையில் தங்களின் அழைத்தல் நிலைக்கு ஒப்ப

வைக்கப்பட்டிருந்ததால், ஏராளமான மக்கள் தொலை தூரங்களிலிருந்து திருப்பயணிகளாக நடந்தே வத்திகான் வளாகத்தை வந்தடைந்தனர். ஏறக்குறைய 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் திருத்தந்தையின் அடக்கத்திருப்பலியில் பங்கேற்றனர்.

திருத்தந்தையின் அடக்கத் திருப்பலியில் 130 உயர்மட்ட பிரதிநிதிகள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல் உரோம் நகரின் புனித மேரி மேஜர் பெருங்கோவிலில் அடக்கம் செய்யப்பட்டாலும், அவரின் இறுதி அடக்கத் திருப்பலி வத்திகானின் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் நடைபெற்றது. இதில் உலகின் பல்வேறு நாடுகளின் 130 பிரதிநிதிகள் குழு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அடக்கச்சடங்கில் கலந்து கொண்டனர். இதில் 50 அரசுத் தலைவர்களும், 10 முடியரசுகளின் தலைவர்களும் உள்ளடக்கம்.

இந்த அடக்கத்திருப்பலியில் மனைவி மெலானியுடன் அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத்தலைவர் டொனால்டு ட்ரம்ப், இத்தாலிய பிரதமர் ஜியார்ஜியா மேலோனி, அரசுத்தலைவர் செர்ஜியோ மத்தரெல்லா, திருத்தந்தையின் தாய்நாடான அர்ஜென்டினாவின் அரசுத்தலைவர் ஹாவியோ மிலெய், இந்திய அரசுத்தலைவர் ஸ்ரீமதி திரௌபதி முர்மு, மற்றும் பிரான்ஸ், பிலிப்பின்ஸ், உக்ரைன், போலந்து, தொமினிக்கன் குடியரசு, க்ரோவேசியா, ஈக்குவதோர், மொல்தோவா, வாதவியா, பிரேசில் ஆகிய நாடுகளின் அரசுத்தலைவர்கள், இங்கிலாந்து, அயர்லாந்து, நியூசிலாந்து ஆகியவைகளின் பிரதமர்கள் பெல்ஜியம், ஸ்வீடன், ஸ்பெயின், ஆகியவைகளின் மன்னர்கள், இங்கிலாந்தின் வேல்ஸ் இளவரசர் வில்லியம், நார்வேயின் இளவரசர் ஹாகோன், ஐநா. பொதுச்செயலர் அந்தோனியோ குட்டாரஸ், ஐரோப்பிய ஒன்ஷியத்தின் தலைவர் உர்சுலா பான் தெர் லெயன் ஆகியோர் உட்பட ஏறக்குறைய 130 உயர்மட்ட பிரதிநிதிகள் குழு இடம் பெற உள்ளது.

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Easter greetings to you. There are 48 parishes haver submitted their annual returns. I request those who have not sent, do so at once. There are many priests have given the slab. The slab is 7.5% of your total income. It is mandatory. I extend my sincere thanks for all who have contributed the slab. I request the other priests too to pay the slab and support the diocese. The religious run parishes i.e., Villiavarambil, Valangaiman, Natchiarkoil, Valadi, Samayapuram and Manakkal have contributed the slab this year. I thank them for their support.

The following is the list of Parishes, Institutions and Priests who have contributed their Slab, Surplus Mass Intentions and Contributions (April, 2025):

Community Hall Contribution	
1. Thuraiyur	45,000
2. Kallakudi	1,00,000
Contribution from Poondi Pudumai Matha B.Ed. College	5,00,000
Contribution from Priests' Abroad	
1. Fr. S. Jerome Paulraj from Sep, 2024 - March, 2025	87,500
2. Fr. A. Cyril Robert form July, 2022 - June, 2025	12,00,000
Mass Intention	
1. Thuraiyur	35,000
2. Keelaneduvai	40,000
3. Elakurichi	10,00,000
4. Thiruppanthruithi	8,000
Salary from teaching priests	
1. Fr. A. Arul Sebasthian for March, 2025	47,540
2. Fr. L. Robert Selvan for March, 2025	1,23,901
3. Fr. K. Robert upto March, 2025	2,80,000

Pension contribution	
1. Fr. J. John Pannerselvam	14,000
2. Fr. L. Benjamin	16,000
Slab Collection	
1. Jayankondam	60,000
2. Sukkambar	10,000
3. Ariyalur	1,00,000
4. Annamangalam	45,000
5. Pattanamkurichi	2,000
6. Viragalur	20,000
7. Michaelpatti	65,000
8. Thiruvalanthurai	5,000
9. Pullambadi	30,000
10. Valangaiman	4,500
11. Keelaneduvai	5,000
12. Periyavarseeli	25,000
13. Malathankulam	7,000
14. Thiruvaiyaru	40,000
15. Thiruppanthurithi	22,500
16. Andimadam	18,500
17. Agnespuram	5,000
18. Manakkal	7,500
19. Susaiapparpattinam	10,000

My sincere thanks to all who have contributed to the diocese through Slab, Mass Intentions, Salary etc.

Yours in Christ,
Fr. J. Antony Joseph,
Procurator

வத்திக்கான் செய்தி

அமைதி, இரக்கத்தின் திருத்தந்தையாகத் திகழ்ந்தவர்

திருத்தந்தை பிரான்சிஸ், ஏழைகளை அரவணைத்தவர், ஒடுக்கப்பட்டவர்களை பாதுகாத்தவர், நற்செய்தியின் அழைப்பின் பேரில் திருஅவையை முன்னிலைப்படுத்தி வாழ வேண்டும் என்று வலியுறுத்தியவர், அதன்படி தானும் வாழ்ந்தவர். திருஅவையையும், எளிய மக்களையும் முன்னிலைப்படுத்திய சிறந்த தலைவர், அமைதி மற்றும் இரக்கத்தின் திருத்தந்தையாகத் திகழ்ந்தவர். விளிம்புநிலை மக்களின் இறைவாக்கினராக வாழ்ந்தவர். ஏப்ரல் 21, திங்கள் கிழமை இறைபதம் அடைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடலானது வத்திகான் சாந்தா மார்த்தா இல்லத்தில் ஏப்ரல் 22, செவ்வாய் அன்று அஞ்சலிக்காக வைகக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஏப்ரல் 23 ஆம் தேதி முதல் ஏப்ரல் 25 ஆம் தேதி மாலை வரை தூய பேதுரு பெருங்கோவிலில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இந்த மூன்று தினங்களில் ஏறக்குறைய 2,50,000 மக்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடலிற்கு அஞ்சலி செலுத்தினர்.

12 ஆண்டுகாலம் திருஅவையை மிகச்சிறப்பாக வழிநடத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அடக்க திருப்பலியானது, கடந்த ஏப்ரல் 26, சனிக்கிழமை அன்று, இந்திய நேரப்படி காலை 1:30 மணியளவில் வத்திகான் தூய பேதுரு பெருங்கோவிலில், கர்தினால் ஜொவான்னி பத்திஸ்தா ரே அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இத்திருப்பலியில் பங்கேற்பதற்காக அதிகாலை முதலே வத்திகான் வளாகமானது இறைமக்களால் நிறைந்திருந்தது. வத்திகான் நகரத்தை ஒட்டிய பகுதிகளில் போக்குவரத்து வாகனங்கள் திருப்பலியில் பங்கேற்க திரண்டுவரும் மக்கள் கூட்டத்தை முன்னிட்டு நிறுத்தி